கத்தோலிக்க வாரவெளியீடு
( செய்தித்தாளாகப் பதிவுபெற்றது )
மலர்: 97 இதழ்: 42
கார்த்திகை 4 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

“ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண் ”

## ரொடீசிய வெள்ளையரின் அநீதிகள் கண்டிக்கப்படவேண்டும்

அகிலஉலக கிறீஸ்தவசபைகளின் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றிவந்த டக்டர் பிளேக் அடிகளார் தமது பதவியிலிருந்து நீங்கு முன் விடுத்திருக்கும் அறிக்கையில் ஆபிரிக்காவில் வெள்ளையர் தமது ஆட்சியைச் சிலசில இடங்களில் நிரந்தரமாக நிலைநாட்ட அப்பகுதிகளில் வசிக்கும் ஆபிரிக்கர்களுக்குச் செய்துவரும் அநீதிகளைப் பகிரங்கமாகக் கண்டிக்கப் பிறநாடுகளிலிருக்கும் கிறீஸ்தவசபைகள் முன்வர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தமது அநீதிகளை வெளிப்படுத்தாது மறைத்துவர அந்நாட்டு அரசாங்கங்கள் செய்துவரும் பகிரத முயற்சிகள் வெட்கத்துக்குரியனஎன அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

# சமுதாய சமாதானம் காணும் நல் முயற்சி

எமதுநாட்டு இருபெரும் சமுதாயங்களாகிய சிங்கள—தமிழ் மக்கள் மத்தியில் நிரந்தரமான சமாதானத்துக்கு வழிதேடும் பொருட்டு தென் இலங்கையில் விளங்கும் பல்வேறு இயக்கத்தின் தலைவர்கள் சிலர் அடங்கிய நல்முயற்சிக் குழுவொன்று சென்றவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயந்தந்து, தமிழ்ப்பகுதி பகிரங்க கரும ஆலோசகர் சபையினருடன் கலந்து ஆலோசித்துச் சென்றிருக்கின்றது. அக்குழுவில் குருநாகல், கண்டி மறைமாவட்ட அட்சகர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க அடிகளாரும், அக்குவைனஸ் கல்லூரி மாஜித்தலைவர் சுவாமி திசாபாலசூரியர் அவர்களும், ஐக்கியநாடுகள் ஸ்தாபன முன்னாள் இலங்கைப் பிரதிநிதி சேர் செனரத் குணவர்த்தன அவ[illegible] காந்தி நம்பிக்கை நிறுவனத் தலைவர் திரு. டி. பி. எல்லப்பொல அவர்களும், இலங்கை நல்லொழுக்க புனராயுத பாணியர் சபைத்தலைவர் திரு. தேவசூரியசேன அவர்களும் இன்னோரன்ன உயர்மதிப்புள்ள பலரும் அடங்கியிருந்தனர். தமிழ்ப்பகுதிகளின் சார்பில் தமிழ்ப்பகுதி பகிரங்க ஆலோசகர் சபையின் தலைவர் திரு. கே. நேசையா தலைமையில் இப்பகுதியின் பல பெரியார்களுடன் இவர்கள் கலந்து ஆலோசித்துச் சென்றிருக்கின்றனர். கொழும்பு சென்றதன்பின் இந்த விஜயத்தைப் பற்றிப் பத்திரிகையாளர்களுக்குச் சுவாமி பாலசூரியர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார். இன்றுள்ள நிலைமையில் தமிழ்மக்கள் பெரிதும் அதிருப்தி உள்ளவர்களாயிருப்பதை எவரும் அறியக்கூடியதா யிருக்கின்றதென்றும், அரசியல் யாப்பு அமைப்பதில் தமிழ்மக்களின் அபிப்பிராயங்கள் எள்ளளவும் ஏற்றுக்கொள்ளப்படாததும், தமிழ் இளைஞர்களுக்கு சர்வகலாசாலைப் பிரவேசத்திலும், அரசாங்க வேலைகள் பெறுவதிலும் அநீதிகள் புகுந்திருப்பதிலுமே விசேஷமான மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறதெனவும் கூறினர். அவற்றை நீக்கி வைப்பதில் நல்மனமுடைய யாவரையும் தமது குழுவினர் எடுக்கும் முயற்சிகளில் ஒத்துழைக்குமாறு விண்ணப்பித்து அத்துடன் தமிழ்த் தலைவர்களை நாடு பொருளாதார நிலைமையில் அல்லோல கல்லோலப் பட்டிருக்கும் இத்தருணத்தில், பொறுப்புணர்ச்சி குன்றியஒருசிலரின் பலாத்கார வேகத்துக்கு இடங்கொடாது அரசியல் விவேகத்துடனும், தென்பகுதி மக்களின் ஒத்துழைப்புடனும் தமது இலட்சியங்களை அடையத் தமிழ் மக்களுக்கு வழிகாட்டக் கேட்டுள்ளார்.

## யூதஇன பலித்தலத்தில் திருப்பலி

ஜேர்மனிதேச சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் அவரினத்தவரைப் பீடித்த யூத இனக் குரோதத்தின் பயனாகப் பல கோடிக் கணக்கான யூதரும் பிறரும் வதை செய்யப்பட்டதும், நச்சுவாயுவினால் அழித்தொழிக்கப்பட்டதும், தாமே தோண்டிய பிரேதக் குழிகளின் விளிம்பில் நிறுத்தப்பட்டுச் சுழல் துப்பாக்கியால் சுடப்பட்டுப் புதைக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயமே. அத்தலங்களில் ஒன்று அவிஷவிச என்னும் இடம். இத்தலத்திலே சென்ற மாதம் சுமார் ஐந்து இலட்சம் கத்தோலிக்கரின் சமுகத்தில், விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட பலிப் பீடத்தில் அமெரிக்கதேசக் கருதினால் மார் கிரோல் அடிகளாரும், றைற் அடிகளாரும் உட்பட, போலாந்து, ஜேர்மனிதேச கருதினால்மார்களும், சில மேற்றிராணிமார், குருமாரும் சேர்ந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்து அங்கே உயிர் நீத்த யாவருடையவும் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடிக் கொண்டனர். அன்று அவ்வைபவத்தில் சமுகம் அளித்தவரில் சிலர் அந்த உபத்திரவத்தலங்களில் வசிக்கும் நிர்ப்பாக்கியம் பெற்றவர்கள். அவர்கள் தமது சிறைச்சாலை ஆடைகளில் தோற்றம் அளித்தனர். இதைக் கண்ட பல்லாயிரமக்களும் துயரத்தால் கண்ணீர் சொரிந்தனர்.

## பரிசுத்த நாட்டிலே ஒற்றுமை இயக்க உயர்மறைக் கல்வி நிலையம்

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் பரிசுத்த நாட்டுக்கு 8 வருடங்களுக்கு முன் விஜயம் செய்தபோது அங்குள்ள சகல கிறிஸ்தவ சபையினரும் ஒருங்கு கூடி தேவ சாஸ்திரக் கல்விகள் பயிலக்கூடிய ஒரு உயர் கல்வி நிலையம் நிறுவுதலை விரும்பிப் பேசியிருந்தார். அவர் விருப்பம் இன்று நிறைவுற்றிருக்கின்றது. ஜெருசலேம் நகருக்கும், பெத்லகேம் பட்டணத்துக்கும் இடையிலுள்ள குன்று ஒன்றின் உச்சியில் தேவ சாஸ்திரக் கல்வி நிலையம் அண்மையில வத்திக்கானால் கொள்விலை செய்யப்பட்ட விசாலமான நிலப்பரப்பில் கட்டப்பட்டுக் கிரேக்க பிதாப்பிதாவின் பிரதிநிதி ஸ்ரெபெனொஸ் அதிஆயரினால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையத்தின் பிரதான பகுதி அங்கு நிறுவப்பட்டிருக்கும் நூல் நிலையமே. பல கிறிஸ்தவ சபை மாணவரும் அந்நிலையத்தில் தங்கியிருந்து, அங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் அரிய நூல்களை உபயோகித்து அங்குள்ள போசிரியர்களின் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதே அந்நிலையத்தின் நோக்கமாகும்.

## வங்காளதேசத்துடன் வத்திக்கான் அரசியலுறவு

அண்மையில் பாக்கிஸ்தான் தேசத்திலிருந்துபிரிந்து தனி நாடாக இயங்கிவருகின்ற வங்காள தேசத்துடன் வத்திக்கான் அரசியலுறவு வைத்துக் கொள்ள முடிவுசெய் திருக்கின்றது. வங்காளதேச தலைநகரமாகிய டக்காநகரில் வத்திக்கான் தூதுவரும், றோமாபுரியில் வங்காளதேச தூதுவரும் விரைவில் இடம்பெறுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

## குருநாகல் கிறிஸ்தவ வைத்தியர் கொண்டாடிய வைத்திய லூக்காஸ் தினம்

குருநாகல் பிரிவிலுள்ள ஆங்கில கிறிஸ்தவ வைத்தியர் ஒற்றுமை இயக்கத்தை அப்பிரிவில் பலப்படுத்தத் தக்கதாகப் புனித லூக்காஸ் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்று தினம் கத்தோலிக்கரும், மறு கிறிஸ்தவ சபையினரும் புனித லூக்காஸ் தேவாலயத்தில் ஒன்றுகூடி அப்பிரிவு அங்கிளிக்கன் சபை மறைவட்ட அத்தியட்சகர் லக்ஷமன் விக்கிரமசிங்க அடிகளாரின் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர். குருநாகல் நகர விசாரணைப் பங்கு அதிபர் வணக்கத்துக்குரிய பீட்பெர்ணாந்து சுவாமியாரும், அங்கிளிக்கன் சபைத் தேவாலய பரிபாலகர் சாம் குணவார்தன அடிகளாரும் ஒன்று கூடிச் செய்துவரும் முயற்சிகளினால் கிறிஸ்தவ ஒற்றுமை இப்பிரிவில் சமீப காலத்தில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது. அன்று தினம் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஆங்கில வைத்தியரில் பலர் இக்கொண்டாட்டத்தில் பங்குபற்றிக் கொண்டனர். அப்பிரிவு வைத்திய சேவை அதிபர் டக்டர் திரு. இராசேந்திரா அவர்கள் உண்மையான வைத்திய சேவையைப் புனித லூக்காசுக்குக் கிறிஸ்துநாதர் கொடுத்த அழைப்புக்கு ஒப்பிட்டுப் பாராட்டினார்.

## பாப்பரசர் வெனிஸ் நகரைத் தரிசிக்கின்றார்

அருளப்ப பாப்பானவர் திருச்சபைத் தலைவராகத் தெரியப்பட்டபோது அவர் பத்திறியாக்குவாயிருந்த வெனிஸ் நகரைச் சின்னப்ப பாப்பரசர் அன்று சனிக்கிழமை தரிசித்து அங்குள்ள பெரிய கால்வாயைக் கொம்பு வள்ளம் ஒன்றிலே கடக்கலாயினர். அவர் அதில் சென்றபோது தம்முடைய இடது காத்தால் தம்மைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு, கரைநீளம் காட்சிபார்த்து நின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தமது வலது காத்தை மேலே உயர்த்தி எல்லோருக்கும் வாழ்த்துத் தெரிவித்தார். அதற்குமுன் மோட்டார் லோஞ்ச் ஒன்றிலே அந்தக் கால்வாயில் ஒன்றரை மைல் தூரம் பயணஞ் செய்தார். 172 ஆண்டுகளுக்குப் பின்னர் பாப்பரசர் ஒருவர் [illegible] போது அந்நகரைத் தரிசித்தமை இதுவே முதன்முறையாகும். தரிசனை முடிவில் அவர் அந்நகரிலுள்ள சித்திரக்கலைப் பொக்கிஷங்களைத் திருத்திப் புதுக்குவிப்பதற்கென்று நகரமேயரிடம் 20,000 பவுணும், நகரிலுள்ள ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு அந்நகர பத்திரியாக்குவான லூசியானி மேற்றிராணியாரிடம் 25,000 பவுணும் கையளித்தார். 1970ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றபின் அவர் நடத்திய அதிகம் நீடிய பிரயாணம் இதுவாகும்.

## பிரித்தானிய தேச எலிசபேத்ராணி யூகோசிலாவிய விஜயம்

சில காலமாக, உலகை இறுகப் பிணித்திருந்த பகைமை ஓரளவு தளர்ந்து, ஒருவரொருவருடன் சேர்ந்து வாழும் மனப்பான்மை வளர்ந்து வருவதற்கு சென்றவாரம் பிரித்தானியதேச எலிசபேத் இராணி, கொமியூனிஸ்ததேசமாகிய யூகோசிலாவியாவுக்குச் செய்த விஜயம ஒரு உதாரணமாக விளங்குகின்றது. யூகோசிலாவியாவில் தலைவர் ஜனாதிபதி ரீற்றோவும், மறு அதிகாரிகளும் மகா இராணியின் விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்து அவருக்குத் தகுந்த மரியாதை செய்து அனுப்பியுள்ளனர். அந்நாட்டுப் பொது சனங்களும் பல்லாயிரக்கணக்காக மகாராணி விஜயம் செய்த இடங்களில் எல்லாம் சமுகம் அளித்து அன்பு மனம் காட்டி அவரை உபசரித்தனர். இவ்வாறே சமீபகாலத்தில் மேற்குலக தேசத் தலைவர்களும், கொமியூனிஸ்த தேசத் தலைவர்களும் அகலாப் பகைமையை நீக்க மனங்காட்டி வருவது சற்று ஆறுதலுக்குரியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரில் பாய்ந்துவரும் புலியைக்காட்டிலும் காலடியில் நெளிந்துஓடும் பாம்புதான் அதிக அபாயம் உள்ளது.

* * *

மனிதனுக்கு இலட்சணங்கள் தேவையில்லை; இலட்சியங்களே தேவை.

## சத்தியவேத பாதுகாவலன்

## மரணத் திரைக்கு அப்பால்

இன்றைய மக்களெல்லோரும் பெரும்பாலும் இவ்வுலக சிந்தனையோடுதான் வாழ்கின்றார்கள். திருச்சபையும் கூட உலகில் சமூக நீதியையும், பிறர்சிநேகத்தையும் நிலைநாட்டி இவ்வுலகை மக்கள் அன்புடனும், சமாதானத்துடனும் வாழக்கூடிய இடமாக ஆக்குவதற்குத் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி வருகின்றது. இவையெல்லாம் மிகவும் நன்மையானவையே. ஆனால், அதே வேளையில் கிறிஸ்துநாதரின் முக்கிய போதனை சமூகச் சீர்திருத்தம் அன்று, மறு வாழ்வைப் பற்றிய சிந்தனைதான் என்பதை மறந்துவிடலாகாது. நீதியையும் பிறர்சிநேகத்தையும் ஒரு கிறிஸ்தவன் அனுசரிப்பது நித்திய வாழ்வின் பொருட்டேயாம். கிறிஸ்தவர் தாம் இவ்வுலகில் யாத்திரிகர் என்பதையும் மனித வாழ்வின் இலட்சியம் மறுவாழ்வே என்பதையும் உணர்வார்கள்.

எமக்கு அப்பாலிருக்கும் உலகம் எமது கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அவ்வுலகிற்றான் ஆதாம் தொட்டு இன்றுவரை வாழ்ந்த எல்லாச் சாதி சமூகத்தினரும், இவ்வுலகில் சில கணங்களே வாழ்ந்த பாலர்களும், முதிர்ந்த வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தவர்களும் வாழ்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை கடற்கரை மணலைப் போல் அளவிடற்கரியதாயினும், அம்மணற் துணிக்கை ஒவ்வொன்றும் இறைவனுக்குத் தெரிந்த உயிருள்ள ஓர் ஆத்துமாவாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த உண்மையை விசுவசிக்க வேண்டும். மரித்தோரின் மாதமாகிய கார்த்திகை மாதத்தில் இவை எமது மனக்கண்ணில் தெட்டத் தெளிவாக காட்சியளித்துக் கொண்டிருக்க வேண்டும்.

கடவுளின் கண்களில் திருச்சபை, உலகில் போராடிக் கொண்டிருக்கும் கிறிஸ்துவின் சிறு மந்தை மட்டுமல்ல, மரணத்தின் எல்லையைக் கடந்து இவ்வுலகிலும் அதற்கு அப்பாலும் வியாபித்திருக்கும், கிறிஸ்துவின் அன்பினால் மீட்கப்பட்ட ஆத்துமங்களின் கூட்டமே. இக்கூட்டத்தில் முதன்மையானவராகிய புனிதர் எமது வாழ்விலும் அலுவல்களிலும் அக்கறையுள்ளவர்களாய், தமது சகாயத்தைக் கோருபவர்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

ஆனால் நாம் கார்த்திகை மாதத்தில் முக்கியமாக நினைவுகூர்வது எமது சகாயத்தை வேண்டி நிற்கும் எண்ணற்ற ஆத்துமாக்களையேயாகும். தாம் விரைவில் மோட்சம் சேரும் பொருட்டு, பூமியில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் தம் நண்பர்களின் செபங்கள் தியாகங்களை அவர்கள் வேண்டி நிற்கின்றனர். அவர்கள் தமது களங்கங்களிலும், குறைபாடுகளிலுமிருந்து விடுபட்டு மோட்சம் சேரும் நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றனர். கத்தோலிக்கர் வழக்கமாக அவர்களது நிலைமையை மிகப் பயங்கரமாகக் கற்பனை செய்கின்றனர். இது பொருத்தமற்றது. ஏனெனில் இந்த ஆத்துமாக்கள் நம்பிக்கையில் வாழ்கின்றனர். நம்பிக்கை இருக்கும்போது, இறைவனுடன் ஒன்றிக்கும் காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது எத்துன்பத்தையும் அவர்கள் சந்தோஷமாகச் சகிக்கலாம். பூரணமான இன்பத்தை எய்துவதற்குக் காத்திருக்கும் இறைவனின் அடியார்கள் அதை விரைவில் அடைவதற்குத் தமக்கு யாரேனும் துணைபுரிவார்களோ என்று ஏங்குகின்றனர். ஒவ்வோர் ஆத்துமாவும் தத்தமக்கேயுரிய வேதனையையும் உலைவுகளையும் அனுபவித்தாக வேண்டும். ஆனால், அவர்கள் நமக்கு எட்டாத தூரத்திலில்லை ஆகவே இல்வாழ்வில் எமது அன்புக்குரியவர்களாய் இருந்தவர்களையும், விசேஷ பந்தங்களால் பிணைக்கப்பட்டவர்களையும் மரணம் எம்மிடமிருந்து பிரித்துவிட முடியாது. கல்லறைக்கப்பாலும் நாம் அவர்களுக்குக் கைகொடுத்துதவி அவர்களது பிரதியன்பைப் பெற்றுக்கொள்ள வழியுண்டு.

## எமது நாட்டுத் தோட்ட அப்போஸ்தோலிக்க சேவை

இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்களிலும் றப்பர்த் தோட்டங்களிலும் கத்தோலிக்க தொண்டு கூவி அழைக்கின்றது. குருமார் கன்னியர் பொதுநிலையாளராகிய பல வகுப்பினர்களும் தேவைப்படுகின்றனர். இத்தோட்டங்களில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களாயிருப்பதால் கத்தோலிக்கசேவைத் தொண்டர்கள் தமிழ்பேசக் கூடியவர்களாயிருப்பது அவசியமாகின்றது. ஆகவே தமது சேவையை அர்ப்பணம்செய்யத் தயாராயிருப்பவர்களுக்கு வேண்டியபயிற்சி அளிக்கச் சென்றவாரம் கொழும்பில் அதிமேற்றிராணியார் இல்லத்திலும் காலி மேற்றிராசனத்திலும் விசேஷ ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

## அருளப்ப பாப்பரசரின் நடமாடும் காட்சிச்சாலை

23ஆம் அருளப்ப பாப்பானவரின் வாழ்க்கை வரலாற்றை மெழுகால் செய்த அவரின் உருவங்கள் கொண்டு வருணித்துக் காட்டுகின்ற நடமாடும் விநோத காட்சிச்சாலை ஒன்றைத் தயாரிக்க இத்தாலியிலுள்ள பிரபல சினிமா நிறுவனம் ஒன்று முனைந்திருக்கின்றது. மெழுகால் செய்யப்படும் அவரின் உருவங்கள் ஆள்பரிமாணம் உள்ளனவாயிருக்கும். எல்லோராலும் அன்பு பாராட்டப்படும் அருளப்ப பாப்பானவர் பேர்காமோ கிராமத்தில் ஒரு பாலியராயிருந்த காலந்தொட்டு 1963ஆம் ஆண்டு தமது 81ஆம் வயதிலே அவர் இறைவனடி சேர்ந்த மட்டாய் அவரின் சீவியவரலாற்றை இந்த உருவங்கள் சினிமாப் படங்களில் போன்று சிறப்பாக எடுத்துக்காண்பிக்கும். இவற்றிலே (1) ஆஞ்செலோ றொங்கல்லி ஒரு பாலியராய் இருந்தபோது தமது கிராமத்தில் நடமாடி வருவது, (2) முதலாவது உலக யுத்தத்திலே அவர் இத்தாலிய காலாட்படையில் ஒரு வைத்திய கீழ்அதிகாரியாயிருந்து காயமடைந்தவர்களைக் காயங்கள் கட்டிப் பராமரிப்பது, (3) பாப்பரசராக இருக்கும்போது றோமை நகரிலுள்ள பெயர்கெட்ட றெஜின கோயெலி சிறைச்சாலையை அவர் தரிசிப்பது, அதிலிருந்து வந்த சிறைக்கைதிகள் மிகவும் அருட்சிக்குரிய விதமாக அவரை வரவேற்று உபசரிப்பது, (4) 1958ஆம் ஆண்டு அவர் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பெற்றது, (5) 1962ஆம் ஆண்டு அவர் வத்திக்கான் திருச்சங்கத்தை ஆரம்பித்து வைப்பது, (6) நடமாடும் காட்சிச்சாலையின் உட்புறத்தின் ஒரு காட்சியாகிய பல்வேறு கவர்ச்சிகரமான காட்சிகளும் இதில் அடங்கியிருக்கும்.

## கைப்பாசின் அரண்மனை

யூதர்களின் இஸ்ராயேல் நாட்டில் இருந்துவரும் கத்தோலிக்க குருமாரில் ஒரேயொரு ஆங்கிலேயர் வண. கபிரியேல் கிலேற்றர் சுவாமியாரே. இவர் ஜெருசலேம் நகரில் சீயோன் குன்றின் மீதுள்ள 'கொக்கிறே' எனுமிடத்தில் அமைந்திருக்கும் அப்போஸ்தலரான புனித இராயப்பர் கோவிலில் தங்கியிருக்கின்றார். சான்கெட்றின் என அறியப்படும் யூத குருமார் சங்கத்தால் கிறிஸ்துநாதர் மரணத்தீர்வையிடப்பட்ட இடமாகிய பெரிய குருவான கைப்பாசின் அரண்மனையிருந்த தலத்தில்தான் இந்தக்கோவில் இருந்து வருகின்றது. சென்ற பாஸ்குக்காலமாகிய சித்திரை மாதத்தில் மட்டும் 10,000 யாத்திரிகர்களுக்குத் தாமும் தமது சககுருமாரும் இத்திருசேத்திரத்தைச் சூழவரா விடுதியளித்திருப்பதாகச் சுவாமியார் தெரிவிக்கின்றார். இந்த மூன்று குருமாரும் எட்டுப் பாஷைகளில் தேர்ச்சிபெற்றவர்கள். கிறிஸ்த ஐக்கிய இயக்க குழுக்கள் அங்குவந்து அடிக்கடி சந்திப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

## பாரிய குடும்ப பிதாவுக்குத் தேசியப் பரிசில்

ஸ்பானிய தேசத்தில் ஓர் ஆட்டிடையரான 107வயதுடைய யோஸ் மரியா புலிடோ என்ற கத்தோலிக்க பாட்டனார் மூந்த மணஞ்செய்திருந்த மனைவி இறந்துபோக மறுமணஞ் செய்தார். அவளும் இறந்துபோக மற்றொரு மணஞ் செய்தார். பாவம், இவளும் இறந்துபோக நான்காம் முறையும் மணஞ் செய்து கொண்டார். நான்குமுறையும் தாரமிழந்தவராய் இருந்தபோதிலும் அவர் இன்று ஒரு தனி மனிதரல்ல; 44 பிள்ளைகளும், 72 பேரப்பிள்ளைகளும் அவரைப் புடைசூழ்ந்து நிற்கிறார்கள். ஸ்பானிய பாரிய குடும்ப பிதாவுக்கு வழங்கப்படும் தேசியப்பரிசிலும், 7500 டலரும் இம்முறை இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் திடதேகியாயிருந்து அன்று ஒரு மாட்டுப் போரைப்பார்க்க இவர் புறப்பட்டுச் செல்லுகையில் தன்னைச் சந்திக்க நேர்ந்த நிருபர் ஒருவருக்குப் பின்வருமாறு கூறினார். "நான் எனது மனைவிமார் நால்வரையும் நேசித்தேன்; நான் அதிகம் சுருட்டுப் புகைக்கிறேன்; ஆனால், ஒரு போதுமே மதுபானம் அருந்துவதில்லை; 72 பேரப்பிள்ளைகள் எனக்கு இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்; ஆனால், அவர்களின் பெயர்களை ஞாபகத்தில் வைத்திருக்க என்னால் முடியவில்லை." இவர் ஸ்பானிய தேச "முதுபெரும் தாத்தா"வென இப்போது அழைக்கப்படுகிறார்.

### பத்திரிகைச்சபை மசோதா கத்தோலிக்க சங்க பரிசீலனை

சென்ற மாதம் 24-ம்திகதி அகில இலங்கை கத்தோலிக்க சங்கம் நடாத்திய கூட்டத்தில் பத்திரிகைச் சபை நுணுக்கமாக ஆராயப்பட்டு அண்மையில் அதுபற்றி அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் தரப்பட்ட விளக்கங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது. இறுதியில் மேலும் ஆலோசனை செய்தபின் பிரதமருக்குச் சமர்ப்பிக்க ஒரு விசேஷ உபகுழு நியமிக்கப்பட்டது.

### 23-ம் அருளப்பபாப்பரசரைப் புரிந்துகொள்ளாதவரும் உளர்

காலஞ்சென்ற பாப்பரசர் 23-ம் அருளப்ப தந்தையின் சிறப்பைப் பாராட்டுபவர்கள் பல கோடிக்கணக்கானவர் இருக்கின்றனர். எனினும் அவரைச் செவ்வனே புரிந்து கொள்ளாதவரும் சிலர் உளர். இச்சிலர் அவரை ஒரு குதூகலமான விருத்தாப்பிய கிராமக் குருவானவரேயன்றிப் பாப்பரசர் பதவிக்கு இருக்க வேண்டிய விவேகம் படைத்தவரல்லர் என்று விபரித்திருக்கின்றனர். இச் சிலரைக் கருதினால் ஜோண் றைற் அடிகளார் சுத்த பைத்தியர் என வர்ணித்திருக்கின்றார். குதூகலமுடைய விருத்தாப்பியர் என்பது உண்மையெனினும் எளிமை, ஆழம், பக்தி ஆகிய குணவிசேஷங்கள் நிரம்பியவரென்றும், சிறந்த இராசதந்திரி என்பதை அவர் கடமையாற்றிய துருக்கி, கிரீஸ், பிரான்சு தேசங்களில் போதியளவு நிரூபித்திருக்கின்றார் என்றும் எடுத்துக்கூறி இத்தப்பபிப்பிராயத்தைத் திருத்தியிருக்கின்றார்.

### "குடும்பமே முதல் குருமடம்" பாப்பரசர் கூறுகின்றார்

உலகில், திருச்சபை விசுவசித்து நம்புவதன் பிரத்தியட்ச அறிகுறியாக இளைஞர்கள் மத்தியில் தேவ அழைத்தல்களைப் போஷித்து வளர்க்குமாறு கத்தோலிக்க மக்கள் கடுமையாக உழைக்கவேண்டுமெனச் சின்னப்ப பாப்பரசர் அனைவரையும் தூண்டியிருப்பதாக வத்திக்கான் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இறைவனின் திவ்விய குரலுக்கு என்றுமில்லாத பேரார்வத்துடன் ஏராளமான இளைஞர் குழாங்கள் உதாரசிந்தை படைத்த பெருந்தன்மையோடு செவிசாய்க்கும்படியாகவும் அவர்கள் மரியன்னை பக்திவழியாக மனத் தெளிவடைந்து திடமான நற்கருணைப்பக்தி உடையோராய் விளங்கும்படியாகவும் பிரார்த்திக்குமாறு பாப்பரசர் யாவர்க்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குருத்துவ அழைத்தல் என்னும்போது கபடற்ற திறந்தமனமும், சிறந்த மனோபாவமும், அழைக்கப்பட்டவர்களும், அவர்களுடன் நெருங்கியவர்களுமான இருபாலாரும் சுயநலத்துக்குரிய எக் கருமத்தையும், மானிடவியல்புக்குரிய எத்தகைய உலகப்பற்றையும் துறந்துவிடுவதும் பாரதூரப்பட்டவைகளாகுமென்றும், "குடும்பமே முதல் குருமடம்", அதுவே திருச்சபைக்குத் தேவ அழைத்தல்கள் வரும் நிரந்தரமான சேமிப்புத்தலமென்றும் பாப்பரசர் கூறியிருக்கின்றார்.

● ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியா அரசாங்கம் அங்கே வழிபறிகொள்ளை, திருட்டு, கடத்தல் முதலாம் குற்றங்களைச் செய்கிறவர்களைத் தண்டிக்கப் புதியசட்டம் ஒன்றை ஆக்கியிருக்கிறது. இவற்றிலே குற்றவாளிகளாகக் காணப்படுகிறவர்களுக்கு மரணதண்டனை விதிப்பது அன்றேல் கைகால்களில்ஒன்றை வெட்டிவிடுவதுவே அத்தண்டனையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டிய அறையில்.....

எம். ஜோர்ஜ் ராஜேந்திரன்,
புனித சவேரியார் கல்லூரி, நுவரெலியா.

(சென்றவாரத் தொடர்ச்சி)

எனக்கு இங்கு வேலைசெய்வது வெகு இலகுவாக இருந்தது. குருவானவருக்குப் பகல் உணவு சமைக்கும் பொழுதே எனக்கு இரவுக்கும் சேர்த்துச் சமைத்துக்கொள்வேன். இரவில் குருவானவர் ஒன்றும் சாப்பிடுவதில்லை. ஒருகிண்ணம் பால்மட்டும்தான் பருகுவார். காலையிலும் அவர் ஒன்றும் சாப்பிடுவதில்லை. எனக்கு மட்டும் நான் சிற்றுண்டிகள் செய்துகொள்வேன். அவரின் இல்லத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டு கோவிலில் சிறுசிறு பணிகளைச் செய்வதே எனது வேலை.

குருவானவரைப் பார்க்கும் போதெல்லாம், ஒரு புதுமையான பிறவியைக் காணும் உணர்வு என் உள்ளத்தில் ஏற்படும். அவர் அதிகம் பேசுவதில்லை. குரு உடையைத் தவிர வேறு உடையில் நான் அவரைப் பார்த்ததே இல்லை. உணவு விடயங்களிலும் அப்படியே. பகல் உணவைத்தவிர வேறு உணவு உண்பதில்லை. இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகுதான் அவர் உறங்கச் செல்வார். காலையில் ஐந்துமணிக்கு எழுந்து கோவிலுக்குச் செபம் சொல்லச் சென்றுவிடுவார். இப்படியெல்லாம் இருந்தும் அவர் எப்பொழுதும் சிரித்த முகத்துடனேயே இருப்பார். அவரில் ஒருவித குறையும் காணமுடியாது. ஒரு நிறைவான மனிதனைக் காணும் எண்ணமே ஏற்படும். அவருக்கு வயது 27 அல்லது 28 தான் இருக்கும். ஆனால் அனுபவ முதிர்ச்சி நிரம்பிய கண்கள் அவருக்குச் சொந்தமாக இருந்தது. இவ்வளவு இளம்வயதிலேயே தன்னை ஒறுத்து, ஒரு பூரண துறவியைப்போல் இவரால் எப்படித்தான் இருக்கமுடிகிறதோ என்று எண்ணும் பொழுது என்னால் வியப்படைய முடியாமல் இருக்க முடியாது.

நாட்கள் நகரத்தொடங்கின. ஒருநாள் இரவு நான் சாப்பிட்டுவிட்டு கட்டிலில் படுத்திருந்தேன். தூக்கம் வரவில்லை. வீட்டைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது குருவானவரின் படுக்கை அறையிலிருந்து ஒரு விசித்திரமான — கதம்பமான ஒலிகள் எழுந்துகொண்டிருந்தன. ஓர் இளம்பெண்ணின் அனுங்கல் சப்தம் போன்ற ஓர் ஒலியும் வந்துகொண்டிருந்தது. இந்த ஒலிகள் தொடர்ந்து சில நிமிடங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. பிறகு பூரண நிசப்தம் ஏற்பட்டது.

இந்த அசம்பாவிதமான நிகழ்ச்சி என்னைப் பலவாறு சிந்திக்கத் தூண்டியது. குருவானவர் முதலில் என்னை இரவில் இங்கு தங்க வைப்பதற்கு விரும்பாதது ஏன் என்றும எனக்கு இப்போது விளங்கியது. அவரின் படுக்கை அறையில் ஏதோ ஒருமர்மம் சூழ்ந்த சம்பவம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

நான் அவரது இல்லத்தின் எல்லா அறைகளுக்கும் போய் சுத்தம் செய்வேன். ஆனால், எப்பொழுதும் பூட்டியே கிடக்கும் அவரின் படுக்கை அறைக்குமட்டும் போ[illegible] ஒருநாள் சுத்தம் செய்வதாகாக அந்த அறையைத் திறந்துவிடும்படி குருவானவரைக் கேட்டேன். அவர் அதற்குச் சம்மதிக்க மறுத்துவிட்டார். அந்த அறையில் ஏதோமர்மம் சூழ்ந்திருக்கிறது. அதனால்தான் அந்த அறை பகலெல்லாம் மூடியே கிடக்கிறது. இரவில் நான் படுத்தபிறகுதான் குருவானவர் அந்த அறையைத் திறந்துகொண்டு படுக்கச் செல்கிறார். அத்தோடு என் அறை அவரின் படுக்கை அறைக்கு மிகத் தூரத்தில் இருக்கிறது. நான் இரவில் அவரின் படுக்கை அறைப்பக்கம் போகாமலிருப்பதற்காக என் அறைக்கும், அவரின் அறைக்கும் நடுவிலுள்ள ஒரு வெள்ளைநிறம் பூசப்பட்ட கதவைப் பூட்டிவிடுவார். அந்தக் கதவு பூட்டப்பட்டிருந்தால் சமையல் அறையைத் தவிர்த்த வேறுபகுதிகளுக்குப் போகவே முடியாது.

இப்படியான காரணங்களினால் குருவானவர்மேல் எனக்கிருந்த சந்தேகம் வலுத்தது. இரவில் யாரோ ஒரு நபர் அவரின் அறைக்குவந்து நடமாடுவதாகச் சந்தேகம்கொண்டேன். குருவானவர் பசுத்தோல் போர்த்த புலியாக நடமாடுகிறாரோ என்ற எண்ணமும் தோன்றிற்று.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பலவீனம் இருக்கத்தானே செய்யும். இவரிடம் மட்டும் ஏன் இப்படியான ஒருபலவீனம் இருக்கக்கூடாது? சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் எத்தனையோ பெரிய துறவிகளெல்லாம் பலவித இச்சைகளால் தங்கள் துறவறத்தைக் களைந்துவிட்டுப் போனதைக் காணலாம். இவர்மட்டும் என்ன மாத்திரம்? இவரும் மனிதன் தானே!

ஆனால் இவர் தோற்றத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே. ஒரு பாவமும் அறியாத பச்சிளங் குழந்தையின் முகத்தைப்போல அல்லவா இவரின் முகம் இருக்கிறது. கள்ளங் கபடு எதுவுமே தெரியாதவரைப்போல் அல்லவா இருக்கிறார். ஒருவேளை தன்னைப்பற்றி மற்றவர்கள் சந்தேகம் கொள்வார்கள் என்று இப்படியெல்லாம் எண்ணி நாடகமாடுகிறாரோ? அப்படித்தான் இருக்கும்.

அப்படியானால்......!

இப்படியான ஒருவரால் எவ்வளவு பெரியதீங்கு. மோட்சத்தின் பாதையை நமக்குக் காட்டவேண்டிய ஒருவரே இப்படி நடந்தால் மற்றவர்கள் எப்படி நடப்பர்? காலையில் பெரிய பரிசுத்தவான் போல் நடித்துப் பூசைப்பலியும் ஒப்புக் கொடுத்து, அப்ப இரசகுணமாய் இருக்கும் தெய்வமகன் யேசுக்கிறீஸ்துவையே தன் கரங்களில் ஏந்துகின்றாரே. ஐயோ! இவரின் மர்மம் ஒன்றும் எனக்குப் புரியவில்லையே. நாளை காலையில் எப்படியாவது அந்த பூட்டிய படுக்கை அறைக்குள் நுழைந்து ஆராயவேண்டும். ஏதாவது சந்தேகப்படும்படியான தடயங்கள் கிடைத்தால்...... இதே சிந்தனையால் இரவெல்லாம்நித்திரையின்றித் தவித்தேன்.

(வளரும்)

---


## சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
## பிரவேச விண்ணப்பம்—1973

**பின்வரும் வகுப்புகளில் மாத்திரம் இடவசதியுண்டு**

1ஆம் வகுப்பு:

1967ஆம் ஆண்டு தைமாதம் 31-ந்தேதியன்று அல்லது அதற்குமுன் பிறந்த பிள்ளைகள் அனுமதிக்கப்படுதற்கு உரித்துடையராவர்.

4ஆம் வகுப்பு: **31-12-63.**
9ஆம் வகுப்பு: **31-12-58.**
11ஆம் வகுப்பு: **31-12-56.**

அனுமதிகோரும்மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப்பின் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப பத்திரங்கள் 13-11-72-க்குமுன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் செய்யும் பத்திரங்கள் கல்லூரிக் காரியாலயத்தில் பள்ளிக்கூட நாட்களில் காலை **10-15இல் இருந்து 11-15 மட்டும்** நேரில்வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**பிரவேசப் பரீட்சைத் தினம்: 25-11-72.**

சுவாமி மதுரநாயகம்,
கல்லூரி அதிபர்.

19-10-72.


---

### போர்த்துக்காலின்
## முது பெருங்குரவர்

போர்த்துக்கால் நாட்டின் முதுபெருங் குரவரெனப் பெயர் விளங்கியிருந்த வண. செருற்றிம் கொன்சால்வெஸ் தாஸ் நெவெஸ் சுவாமியார் சென்ற ஆனிமாதம் 2ஆம் திகதி தமது 104ஆம் வயதிலே அசுரூரு பட்டினத்தில் காலஞ் செல்லலாயினர். 1892ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்ற இவர் 1900ஆம் ஆண்டு முதல் இதுவரை—அதாவது நடந்த 72ஆண்டுகளாக அசுரூருவின் பங்குக் குருவாயிருந்து தினமும் திவ்வியபூசை நிறைவேற்றி வந்தார். சமீபத்திலேயே தமக்கு உதவியாக ஒருதுணை குருவரைப் பெற்றிருந்தார். இவர் தமது 100ஆவது பிறந்த பெருநாளைக் கொண்டாடியபோது போர்த்துக்கேய ஆகாயப்பிரயாண நிறுவனம் அளித்த இலவச பிரயாணச் சீட்டைப்பெற்று தமது வாழ்க்கையிலேயே முதன் முறையாக ஒபோட்டோ நகரிலிருந்து லிஸ்பன் நகருக்குப் பிரயாணஞ் செய்தார்.

### பூசை கண்டுவரும்
## பாதிரியார்

இங்கிலாந்தில் பாக்ஷொட் நகர் அங்கிளிக்கன் பாதிரியாரான வண. கைஆம்ஸ்ரோங் அவர்கள் கிறிஸ்த ஐக்கியத்துக்கு ஒரு முன்னோடியாக வழமைக்கு மாறாக வாரந்தோறும் ஆலய வழிபாடு ஒன்றில் ஈடுபட்டு வருகின்றார். அதாவது கடந்தகால குரோத உணர்ச்சிகளின் இடமாகச் சகோதரத்துவமும், நல்லெண்ணமும் பிறந்துள்ளன என்பதைக் காண்பிக்கு முகமாகச் செவ்வாய்க்கிழமை தோறும் அங்குள்ள கிறிஸ்து இராசாவின் கோவில் சென்று திவ்வியபூசை கண்டு வருகின்றார். இவர் பொதுவாகப் பூசைகாணத் தனிமையாகவே செல்லும் போதிலும் தவக்காலத்திலே தமது பங்குக் கிறிஸ்தவர்கள் சிலருடன் செல்கின்றார். அங்கு உள்ளபடியே கிறிஸ்த ஐக்கிய உறவு அதிகம் நெருங்கியதாய் இருப்பதாகவும், அங்கிளிக்கன், கத்தோலிக்க, மெதடிஸ்த சபைகளைச் சேர்ந்த குருமார் மாதந்தோறும் ஒருவர் மற்றொருவரின் இல்லத்தில் மாறி மாறி ஒழுங்காகக்கூடி வருவதாகவும் அந்நகரின் பங்குக்குருவர் வண. றேமன்ட் பிறையன்ற் சுவாமியார் தெரிவிக்கின்றார்.

## பல தேசங்களில்

● உலக அரங்கிலே அமெரிக்காவின் செலவாக்கை நிலைநாட்டவிரும்பி அம்புலியில் ஆளை இறக்கவேண்டுமெனக் கட்டளையிட்டு அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்தவர் அமெரிக்க ஜனாதிபதியாயிருந்து அவமிருத்தான திரு. யோன் கென்னடி அவர்களே. அம்புலியில் இறங்கிய முதலாவது அமெரிக்க விண்வெளிப் பிரயாணியான திரு. அலன் ஷெப்பாட்டை வெள்ளைமாளிகையில் வரவேற்றுக் கௌரவித்தவரும் அவரே.

● பைபிள் எனப்படும் வேதாகமம் இதுவரை உலகில்வழங்கும் 1,413 பாஷைகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளதென்றும், மேலும் 500 பாஷைகளிலே அதனை மொழி பெயர்ப்பதில் பன்னூற்றுக்கணக்கான பல பாஷா விற்பன்னர்கள் தற்போது ஈடுபட்டிருக்கிறார்களென்றும் பூவியல் சாஸ்திர சபை அறிக்கையிட்டிருக்கிறது.

● பிரித்தானிய சாம்பிராச்சிய நாடுகளில் பிறந்தவர்களாய்ச் சென்ற வருடம் பிரித்தானிய தேசத்தில் போய்க் குடியேறியவர்களின் தொகை 40,000 பேரால் அதிகரித்திருக்கிறது. இவர்களில் ஏறக்குறைய 30,000 பேரும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஆபிரிக்கநாடுகளிலிருந்து போய்க் குடியேறியவர்கள்.

● அமெரிக்க ஐக்கிய தேசத்தில் ஆண்டுதோறும் வைத்தியத்துறையிலே புதிய பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுப் பல்வேறு நோய்களுக்கும் புதுப்புது மருந்துகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அங்கு வருடந்தோறும் இதற்கென 200 கோடிடலர் செலவிடப்படுகிறது.

● ஈரான்என்று இப்பொழுது அறியப்படுகின்ற பார்சிக நாட்டிலுள்ள அஃவாஸ் அதிமேற்றிராசனமே உலகின் அதிகம் சிறிய அதிமேற்றிராசனமாகும். அந்நாட்டின் குடிசனமாகிய 80லட்சம் மக்களில் 768பேரே கத்தோலிக்கர். இவர்களை மட்டுமே இந்த அதிமேற்றிராசனம் அடக்கியிருக்கிறது.

● அயர்லாந்திலுள்ள பதினெட்டு ஆசனக்கோவில்களிலும், கோவில்களிலும் வழமைபோல அண்மையில் ஒரே ஞாயிற்றுக்கிழமையில் 51 குருத்துவ மாணவர்கள் குருத்துவாபிஷேகம் செய்யப்பட்டார்கள், என்றாலும் இத்தொகை சென்றவருடம் அதேநாளில் குருப்பட்டம் பெற்றவர்கள் தொகையிலும் எட்டுப்பேரால் குறைந்துள்ளது.

● ஐரிஷ் குடியரசு நாட்டின் ஜனாதிபதியான டிவலேரா அவர்களின் பாரியாரான திருமதி சினீட் டிவலேரா சமீபத்திலே தனது 94-வது பிறந்த பெருநாளை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமான மாளிகைச் சிற்றாலயத்தில் நிறைவேறிய திவ்விய பூசையுடன் அமைதியாகக் கொண்டாடினார்.

● ஓர் ஆங்கிலேய பிரபல வர்த்தகரான திரு. ரோகர் ஹேவூட் என்பவர் 1999ஆம் ஆண்டின் புதுவருடப் பிறப்புக்கு முதனாளன்று புதிய நூற்றாண்டை வரவேற்றுத் தனது நண்பர்களுடன் கொண்டாடுவதற்கென்று இப்போதே லண்டன் நகரிலுள்ள அல்பேட் மண்டபத்தை வாடகைக்கு அமர்த்தியிருக்கின்றார்.

● இந்த நூற்றாண்டு இறுதியடையும் நாள் 1999ஆம் ஆண்டின் இறுதி நாளல்ல; ஆனால், அதிலிருந்து ஒருவருடத்தின் பின்னரே அதாவது 2000ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதியன்றே இது முடிவடையுமென்றும், அதனால் நேரத்தையும், பணத்தையும் வீணாக விரயஞ் செய்ய வேண்டாமென்றும் திரு. ரோகர் ஹேவூட்டுக்குப் பலரும் அறிவுறுத்தியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்முடைய இராட்சியம் வருக!

(பி. ஜே. அமிர்தநாயகம்)

## பழைய ஆதாமும் புதிய ஆதாமும்

அன்று ஒருநாள் எல்லாம் வல்லதேவன் தன் அளவில்லாத பரமானந்த சமூகமாகிய பரமதிரித்துவத்தின் நிறைவை சம்பூரணமாகப் பரிமாறச் சித்தமானார். எனவே தனக்கு ஒரு உவந்தமக்களை தனது சாயலாகப் படைக்கச் சித்தமானார். இவ்வாறு படைக்கப்பட்ட இறைமக்களின் முதல் பிதாவே பழைய ஆதாம். ஆனால், தேவன் அளிக்கும் பரமானந்தத்திற்கு இன்றியமையாத ஓர் உன்னத நிபந்தனை இருந்தது. இதுவே மனிதனின் உன்னத இலட்சணம். அதுதான் மனித சுதந்திரம். இந்தச் சுதந்திரத்தை பழைய ஆதாம் தவறாகப் பாவித்தார். அவரில் தோன்றிய முழுமனுக்குலமும் இறைமக்களாகும் உரிமையில் இருந்து சதா விலக்கப்பட்டது. மோட்சவாசல் அவர்களுக்கு என்றும் அடைபட்டது. மனுக்குலத்தில் சாத்தான் புகுந்தான். சமூகம் தேவனளிக்கும் ஒற்றுமையை இழந்தது. இயற்கை உலகமே மனிதனோடு போர் தொடங்கினது. விஞ்ஞான உலகமே மெஞ்ஞான உலகுக்கு விரோதமாய் இருந்தது. சமூகங்கள் மோதின. ஆனால் தேவன் ஒருபோதும் தோல்வி காணமாட்டார். என்றும் ஆள்பவர் அவரே அவர் தேவன். அவர் பழைய ஆதாமுக்கே நம்பிக்கை அளித்தார். சாத்தானின் வெற்றி நிலைநிற்காது. ஒரு கன்னியும் அவளின் உன்னத பிள்ளையும் தேவனின் இராட்சியத்தை நிலைநாட்டுவதாகத் தேவன் வாக்குப்பண்ணினார். தேவனின் விருதுக்கொடி என்றும் பறந்துகொண்டே இருக்கும். அவநம்பிக்கைக்கு இடமே இல்லை. பழைய ஆதாமால் தோன்றின சமுதாயத்தினது இரத்தத்தில் நித்திய மரணத்தின் விஷம்கலந்து இருந்தது. ஆனால், வாக்குப்பண்ணின புதிய ஆதாமால் இவ்இரத்தம் சுத்தமாக்கப்பட்டு முழுச்சமுதாயத்திற்கும் நித்திய சீவியமும் தேவபரமானந்தமும் வாக்குப்பண்ணப்பட்டது.

### அழிந்ததை ஆக்குபவர் :

தேவன் என்றும் தேவன். அவரின் ஆட்சி என்றும் உள்ளது. அவர் சகலத்தையும் கடந்தவர். ஆனால் அவர் அன்பின் தேவன். அவர் தன்னைத் தாழ்த்தினார். அன்பினால் அவர் தாழ்த்தினார். மரணமட்டும் தாழ்த்தினார். அதுவும் சிலுவை மரணமட்டும் தாழ்த்தினார். வார்த்தையானவர் மாமிசமானார். அவரே புதிய ஆதாம். எப்படிப் பழைய ஆதாமால் பாவமும் மரணமும் உலகில் நுழைந்ததோ அப்படியே புதிய ஆதாமால் புண்ணியமும் நித்திய சீவியமும் உலகிற்கு வரத் தேவன் சித்தமானார். தேவனைக் கட்டி எழுப்பினது அழிவைக் காணத் தேவன் ஒருபோதும் விடமாட்டார். எனவே தேவன் அழிந்ததை ஆக்கினார். புதுப்பித்தார். திரும்பவும் படைத்தார். மனித சமுதாயம் பாவத்தால் சுமக்கவேண்டிய நித்திய மரணத்தை புதிய ஆதாம் தனது சிலுவையில் சுமந்தார். அவர் மரித்ததோடு அவரின் அன்பின் வரலாறு முடியவில்லை. அவர் உத்தானமானார். நித்திய சீவியமான தேவன் தனது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதசமுதாயத்திற்கு நித்திய சீவியத்தை நிலைநாட்டினார். அவரில் விசுவாசங்கொள்வோர் அவரின் மரணத்தின் சாயலைத்தாங்கி அவரின் நித்தியமகிமைக்குப் பங்காளிகளாக அவர் வழிகோலினார்.

### ஆக்குபவரும் ஆவியானவரும் :

படைத்தவர் என்றும் வாழ்வாய் இருக்கிறார். அவரே வாழ்வளிக்கும் வள்ளல். தேவன் வாழ்வும் வள்ளலுமாய் இருப்பதால் அவர் அளிக்கும் வாழ்வும் வண்மையும் தேவனளவு. அவை ஒருபோதும் அழிவைக் காணமாட்டா. தேவனே என்றும் திராட்சக் கொடியாயிருக்கிறார். அவரில் விசுவாசம் கொள்வோர் என்றும் அவரில் உயிர் பெற்று வாழும் திராட்சக்கிளைகள். அவரே மறையுடலின் நித்திய சிரசாயிருக்கிறார். அவரில் விசுவாசங் கொள்வோர் என்றும் அவரின் சிரசால் உந்தப்படும் உடலாயிருக்கின்றனர். பழைய ஆதாம் தேவனுக்குப் பணியாத திராட்ச விருட்சமாயும் மரணத்துக்கு ஏதுவான சிரசுமாய் இருந்தார். ஆகவே அவரில் தோன்றின கிளைகளும் மறை உடலும் அவரின் மரணத்தால் அழிந்துபோயின. ஆனால் தேவனுக்கு என்றும் பணிந்த புதிய ஆதாமோ, உயிருள்ள திராட்ச விருட்சமாகவும் அதனின் கிளைகள் என்றும் உயிர்பெற்று செழித்துவளரக் காரணமாகவும் இருந்தார். அவர் உண்மையான நித்திய திருச்சபையின் உன்னத சிரசாகவும் என்றும் உயிர் அளித்து வருகிறார். அன்றொருநாள் தேவனில் தனது மறை உடலை ஆக்கும் உன்னத திராட்ச விருட்சம் இரத்தம் சிந்தி உமது சித்தப்படியே ஆகட்டும்'' என்று சொன்ன பணிவான வார்த்தையை இன்று அகில கத்தோலிக்க உலகமும், அவரின் ஆவியால் உந்தப்பட்டும் "அப்படியே ஆகட்டும்" என்று நற்கருணைப்பலியில் கூறித் தேவனுடன் ஐக்கியம் பெறுகிறது.

### நற்கருணைப்பலியும் ஆவியானவரும்

தேவனால் படைக்கப்பட்டது பழைய ஆதாமால் அழிக்கப்பட்டது. ஆனால் அதுதிரும்பவும் ஆக்குபவரால் புதிதாக ஆக்கப்பட்டது இறைவனுக்கு என்றும் ஓர் உன்னத குடும்பம் உண்டு. அவர்களே இறைமக்கள். அவரின் இராட்சியம் என்றும் வலுக்கொள்ளுகிறது. அது அழிவை இனிக் காணமாட்டாது. கல்வாரிப் பலி ஒரு முறை நடந்தது. ஆனால் நற்கருணைப்பலியோ என்றும் நடந்துகொண்டே இருக்கும். ஆக்குபவரின் ஆவியால் அங்கு கூடுபவர் அவரின் மரணத்தின் சாயலைத்தாங்கி அவரின் உயிர்ப்பையும் அனுபவிப்பார். எல்லோரையும் கிறிஸ்து புதிப்பிப்பார். இதையே புனித பேதுருவும், பாவிலுவும் அன்று விசுவாசித்துப் போதித்தனர். இதையே கிறிஸ்தவர்கள் என்றும் விசுவசித்துச் சீவிக்கின்றனர். பிதாவுக்கும் சுதனுக்கும் தூய ஆவியானவருக்கும் சதா புகழ் உண்டாவதாக.

### பழைய ஏவாளும் புதிய ஏவாளும்

எப்படி முழு மனுக்குலத்தின் அழிவுக்குப் பழைய ஏவாள் காரணமானாளோ அப்படியே அதே குலத்திற்குப் புதியஏவாள் நம்பிக்கைக்கும், நித்திய சீவியத்திற்கும் காரணமானாள். அவள் பசாசின் வலையில் தானும் சிக்குண்டு முழு மனுக்குலத்தையும் பசாசிற்கு அடிமைப்படுத்தினாள். ஆனால், புதிய ஏவாளோ பசாசை நசுக்கிச் சகல மனுக்குலத்தையும் இரட்சித்தாள். அவள் சிற்றின்பத்தில மாண்டாள். ஆனால் மரியாளோ அனைவருக்கும் பேரின்பத்தைத் தேடிவைத்தாள். அவள் பசாசு கொடுத்த கனியைத்தின்று எல்லோருக்கும் தேவ சாபத்தைத் தேடினாள். ஆனால், புதிய ஏவாளோ வார்த்தையானவரைத் தனது மாமிச கனியாக்கி எங்கள் எல்லோருக்கும் நித்திய பரமானந்தம் அளிக்கும் போசனமாக்கினாள். அவள் மரத்தின் கனியால் நித்திய மரணத்திற்கு மனுக்குலத்தைப் பலியாக்கினாள். ஆனால் புதிய படைப்பின் இராக்கினியான மரியாளோ மரத்தில் தனது கனியைப் பலியாக்கி நமக்கு நித்திய சீவியமாக்கினாள். புதிய ஏவாள் எல்லோராலும் வாழ்த்தப்படுவாளாக.

பரம திரீத்துவத்துக்கு மரியாள் போல் என்றும் மகிமையுண்டாவதாக.

## 25-ம் வருட நினைவு

பிரான்ஸ் தேசத்தவரும், திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் முன்னாள் அதிபரும், யேசுசபைக் குருவருமான வண. யூலியன் தெயிசன் அடிகளார் மறைந்த 25-வது ஆண்டு நிறைவு தினம் சென்ற 25-10-72 புதன்கிழமை திருகோணமலை புனித மரியாள் ஆசனக்கோவிலில் நடைபெற்றது.

ஆசனக்கோவில் பிரதம குருவர் அதிவண. ஜீ. ஈ. எல். வம்பேக் அடிகளார் காலை 5-30 மணிக்கு துக்கப் பாடற்பூசை நிறைவேற்றி வைத்தார். பழைய மாணவர்களும், பெருந்திரளான கத்தோலிக்கர்களும் இதில் கலந்து கொண்டனர்.

—நிருபர்

## 1972-ம் ஆண்டுக்கான மறைக்கல்வித்தேர்வு மாதிரி வினக்கள்

### ஒன்பதாம் வகுப்பு

### பகுதி 2

(சென்றவார மிகுதி வினக்கள்)

2ஆம் பகுதிக்கான வினப்பத்திரத்தைப் பெற்று, அதற்கான பதிலை வேறு தாளில் எழுதி இத்துடன் இணைத்து விடவும்.

நாலு வினக்களுக்கு விடைதருக.

1. (அ) யேசுநாதர் பாஸ்குவிழாவைக் கொண்டாடுவதற்காகத் தமது பெற்றோருடன் ஜெருசலேம்நகர் சென்றதையும். அவர்களுக்குத் தெரியாமல் அவர் தேவாலயத்தில் தங்கியிருந்த வரலாற்றையும் விபரிக்குக.
   (ஆ) "என் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா?'' யேசு கொடுத்த இப் பதிலுரையின் கருத்து என்ன?
2. (அ) ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய ஒருவனை யேசு குணமாக்கின வரலாற்றை எழுதுக?
   (ஆ) இப்புதுமைமூலம் மறைநூல் அறிஞருக்கும், பரிசேயருக்கும் அவர் படிப்பிப்பது என்ன?
   (இ) ஓய்வு நாளைப்பற்றி உம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும்?
   (ஈ) நாம் எப்படியாக ஓய்வுநாளை அனுசரிக்கலாம்.
3. (அ) பரிசேயனாகிய சீமோன் வீட்டில் யேசு உணவருந்தியதையும், பாவியாகிய பெண்ணை மன்னித்த சம்பவத்தையும் மிகவும் சுருக்கமாக எழுதுக.
   (ஆ) நற்செய்தி நூலாசிரியர்களுள் ஒருவரான லூக்காஸ் இச்சம்பவத்தின்மூலம் யேசுவைப்பற்றி என்ன கூறுகின்றார்?
   (இ) பரிசேயனான சீமோனைப் பற்றியும், அங்கு பிரசன்னமாக இருந்த கிறீஸ்துவைப்பற்றியும் நீர் என்ன நினைக்கிறீர்?
4. (அ) நாம் நமது பகைவரையும் நேசிக்க வேண்டும்என்று யேசுநாதர் கொடுத்த கட்டளை வார்த்தைகள் யாவை?
   (ஆ) உன் அயலான் நோய்வாய்ப் பட்டிருக்கையில் உன் பிறர் அன்பை எப்படிக் காட்டுவாய்?
5. (அ) தகுதியின்றி நன்மை வாங்குவதுபற்றி புனித சின்னப்பர் என்ன கூறுகின்றார்?
   (ஆ) கத்தோலிக்கரல்லாதோருக்குத் திவ்வியநன்மை வழங்கலாமா? இதைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?


### விற்பனைக்கு!

முதல்தர மகோக்கனி கன்றுகள். விலை ரூ. 2.

பங்குக் குரு

மிருசுவில்


### கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

நாள்: 5-11-72.

நேரம்: மாலை 7 மணி
"நேயர் நேரம்" இதழ் 6.

நேரம்: மாலை 7-10
"சாவு — ஒரு தேர்வு"
சிற்றுரை: செல்வம் அ. ம. தி.

நேரம்: மாலை 7-20
"வினா-விடை" மலர் 3
நடாத்துபவர்: செல்வம் அ. ம. தி.

### நன்றித் துதி

திருஇருதயநாதரினதும், கல்லறை ஆண்டவரினதும் அருளாலும், பரி. பாத்திமாமாதா, புனித யூதாததேயு இவர்களின் மன்றாட்டாலும் என் வேண்டுதல் கிடைத்தமைக்காக இதைப் பிரசுரிக்கிறேன். மேலும் என்வேண்டுதல்கள் நிறைவுபெறவேண்டிக் கொள்ளுகிறேன்.

— ஓர் அடியாள்

திருமதி தம்பு மரியம்மா
அவர்களின்

### முதல் வருட ஞாபகம்

தோற்றம்: 27-2-1907

மறைவு: 6-11-1971

ஆன்மா உடல்பிரிந்து
ஆண்டொன்று கழிந்ததுவே.
ஆற்றுதற் கிவ்வுலகில் எவருமின்றி
ஆருத்துயரத்தில் ஆழ்த்தி
எமைப் போயினையோ!
அன்பின் ஒளியே
அகலாய்ச் சுடர்விளக்கே
வாய்திறந்து பேசாது
வானுலகம் சென்றனையோ
அன்புக் கணவரையும்,
அருமைப் புதல்வரையும்
பரிதவிக்க விட்டுநீயும்
பரமனடி போயினையோ!

இவரது ஆன்ம சாந்திக்காக 6-11-72 திங்கட்கிழமை காலை 5-45 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒரு துக்கபாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறுமனைவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்: தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org